PRINCIPAL DISTRICT COURT, SALEM.

REA.NO.1/2021 IN REP.191/2020 – 8.3.2022

RW1 – ராஜு(எ) தர்மலிங்கம்

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு கோரிக்கை மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

என்னிடம் காண்பிக்கப்படுவது நான் தாக்கல் செய்த தாவாவின் பிராது ஆகும். அது மசாஆ.5 ஆகும். பொன்னி என்பவர் எனக்கு 21.9.1983 ல் எனக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் மசாஆ.6 ஆகும். பொன்னி என்பவர் சின்ராஜ்க்கு அதே தேதியில் எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் மசாஆ.7 ஆகும். அதே தேதியில் பொன்னி என்பவர் கோவிந்தன் என்பவருக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் மசாஆ.8 ஆகும். எனக்கு கோவிந்தன் என்பவர் அவருக்கு கிடைத்த சொத்தை எனக்கு 12.11.1986 ல் கிரயம் செய்து கொடுத்துள்ளார். அந்த கிரய ஆவணம் சான்றிட்ட நகல் மசாஆ.9 ஆகும். 23.1.1984 ல் சின்ராஜ் என்கிற லட்சுமணனுக்கு பொன்னி கிரயம் செய்த பத்திரம் என்னிடம் காண்பிக்கப்படுவதுதான். அதன் சான்றிட்ட நகல் மசாஆ–10 ஆகும். 25.3.1991 ல் சின்ராஜின் மக்கள் எனக்கு எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரம் என்னிடம் காண்பிக்கப்படுவதுதான். அதன் சான்றிட்ட நகல் மசாஆ.11 ஆகும். அசல் வழக்கு எண்.123/2015 ல் தடை உத்தரவு கேட்டு I.A.No.136/2015 மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட

பிரமாண பத்திரிக்கை ஜெராக்ஸ் நகல் மசாஆ.12 ஆகும். தாவாவிற்கு சம்மந்தப்பட்ட வீடுகள் மொத்தம் எத்தனை என்றால் 8 வீடுகள் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள நிறைவேற்று மனுவில் 1வது அயிட்டத்தில் 3 வீடுகளையும் 2வது அயிட்டத்தில் 2 வீடுகளையும் காட்டி சுவாதீனம் கோரி தாக்கல் செய்துள்ளேன். மீதி உள்ள 2 வீடுகளில் இந்த கோரிக்கைதாரர்கள் குடியிருக்கிறார்கள் என்றால் சரியல்ல. எனது தாயார் எனது சகோதரியான லட்சுமி என்கிற கண்ணம்மாவிற்கு எழுதி கொடுத்தார். அந்த வீட்டில்தான் அவர்கள் குடியிருந்தார்கள் என்று சொல்லி உள்ளேன். கலாராணி மற்றொரு வீட்டில் குடியிருக்கிறார் என்றால் சரியல்ல. இந்த மனுவில் கலாராணிக்கு அவரது தாயார் லட்சுமி என்கிற கண்ணம்மாள் எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தை நான் பார்க்கவில்லை. எனது வக்கீலை கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. தாவாவிலும் நிறைவேற்று மனுவிலும் காலம் 4 ல் சொல்லப்பட்டுள்ள 2 வீடுகளிலும் லட்சுமி என்ற கண்ணம்மாவும் கலாராணியும் குடியிருந்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். மேற்படி கோரிக்கைதார்கள் இருவரும் தாவா சொத்திலேயே பிறந்து தாவா சொத்திலேயே வளர்ந்து தாவா சொத்திலேயே குடியிருந்து வருகிறார்கள் என்று சொன்னால் லட்சுமி என்கிற கண்ணம்மாள் பிறந்தது உண்மை. மற்றொரு கோரிக்கைதாரர் தாவா சொத்தில் பிறக்கவில்லை. கண்ணம்மாவும் கலாராணியும் அவர்கள் வசித்து வரும் வீட்டிற்கு மின் கட்டணமும் வீட்டு வரியும் செலுத்தி வருகிறார்கள் என்று சொன்னால் அனைத்து

வீடுகளுக்கான மின் கட்டணம் மற்றும் வீட்டு வரிகள் என் தாயார் பெயரில் உள்ளதால் நான்தான் செலுத்தி வருகிறேன். கிளைம்தாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவில் காட்டப்பட்டுள்ள சொத்தில் மனுதாரர்கள் குடியிருந்து வருவதால் அவர்களுக்கு பாத்தியம் உள்ளது என்றும் எனவே மனுவை அனுமதிக்க வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/-S.Kumaraguru,

Principal District Judge, Salem.